## தமக்கென வாழாமல் தமிழுக்கென வாழ்ந்த

# மறைமலையடிகளாரின் பிறந்தநாளை கழக கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கொண்டாடியிருப்பது சிறப்புக்குரியது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பாராட்டு – வாழ்த்து!

சென்னை, ஜூலை 20 -

மறைமலையடிகளாரின் 150வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (18-07-2026), கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு

““வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலையடிகள் மறையாத் திருப்பெயர்
வாழ்த்தாத நாளில்லை வையகம்!
பொழுதெல்லாம் தமிழுக் குழைத்த தலைவனை
வாழ்த்தாத நாளில்லை வையகம்” - பாவேந்தர் பாரதிதாசன்!

“தமிழ் நன்மங்கையின் அழகிய நன்மேனியில் அம்மைத் தழும்புபோல் வடசொற்களைப் புகுத்தாதீர்கள். தனித்தமிழுக்குப் பாடுபடுங்கள்” என வலியுறுத்தி, தமக்கென வாழாமல் தமிழுக்கென வாழ்ந்த மறைமலையடிகளின் 150-ஆவது பிறந்தநாள் நிறைவுப் பெருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறது கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை! மறைமலையடிகளாரின் வாழ்வையும் பணியையும் இன்றைய தலைமுறையினர் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும்.

வேதாசலம் என்ற தன் பெயரையே மாற்றிக்கொண்டு தமிழ் மறுமலர்ச்சிக்காக உழைத்தவர் அடிகளார். “இந்தி பொதுமொழியா?” நூல் உள்ளிட்ட தம் பங்களிப்புகளால் இந்தித் திணிப்பை எதிர்த்தார்.

“தமிழர் அனைவரும் பண்டுபோல் தமக்குந் தம் இல்லங்களுக்கும் தம்மூர்களுக்கும் பிறவற்றிற்கு மெல்லாந் தூய தமிழ்ப் பெயர்களையே அமைத்தல் வேண்டும்” என்ற மறைமலையடிகளின் வேண்டுகோளினை ஏற்று நம் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பெயர்களைச் சூட்டுவோம்! வாழ்க மறைமலையடிகள் புகழ்!”

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டின் மண் – மொழி – மானம் காக்க

# தமிழ்நாடு நாளில் உறுதியேற்போம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 20-

கழக இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-




**‘மெட்ராஸ் மாகாணம்’ என்றிருந்த நம் மாநிலத்தின் பெயரை ‘தமிழ்நாடு’ என மாற்றிட பேரறிஞர் அண்ணா அவர்களால் சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புக்குரிய நாள் இன்று.**

**‘தமிழர்கள் வாழும் பகுதிக்கு தமிழ்நாடு என்று கூட பெயர் சூட்ட முடியவில்லையே’ என்ற தந்தை பெரியாரின் ஏக்கத்தையும், சங்கரலிங்கனாரின் தியாகத்தையும், தமிழ்ப்பெரியோர்கள் பலரின் விருப்பத்தையும் ஆட்சிக்கு வந்த நான்கே மாதங்களில் நிறைவேற்றிக் காட்டியது நம் திராவிட முன்னேற்றக் கழகம்.**

**அன்றைக்கு தீர்மானத்தை நிறைவேற்றி, ‘தமிழ்நாடு’ என்று அண்ணா அவர்கள் மும்முறை முழங்க, ‘வாழ்க... வாழ்க...’ என்ற உறுப்பினர்களின் முழக்கத்தால் சட்டமன்றமே உணர்ச்சிப் பெருக்கால் தத்தளித்தது.**

**அந்த இனிய தினத்தை தமிழ்நாடு நாளாக திராவிட மாடல் ஆட்சியில் நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள்.**

**தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க தமிழ்நாடு நாளில் உறுதி ஏற்போம்!**

**தமிழ் வெல்க!**

**தமிழ்நாடு வாழ்க!!**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் நம் தலைவர்!

## த.வெ.க. ஆட்சியில் மாற்றுத்திறனாளியை சிறையில் அடித்தே கொன்றுள்ளனர்!

# பொய் வழக்கு - ஆணவம் பிடித்த இந்த ஆட்சிக்கு மக்கள் விரைவில் முடிவு கட்டுவது உறுதி!

## கழக மாற்றுத் திறனாளிகள் அணி கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. எச்சரிக்கை!








**சென்னை, ஜூலை 20–**

**சென்னை கிழக்கு மாவட்டத்தில் கழக மாற்றுத் திறனாளிகள் அணி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர் பாபு பேசுகையில், மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்தவர் நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் எனவும், இன்றைய ஆட்சியில் மாற்றுத்திறனாளியை சிறையில் அடித்தே கொன்றுள்ளனர். இந்த ஆணவம், பொய் வழக்கு போடும் த.வெ.க. அரசுக்கு வெகுவிரைவில் மக்கள் முடிவு கட்டுவது உறுதி எனவும் குறிப்பிட்டுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை கிழக்கு மாவட்டம்,துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் கழக மாற்றுத்திறனாளிகளின் அணி சார்பில் நாகர்கோவில் மாற்றுத்திறனாளி சபரி வர்மன் சிறை மரணத்திற்கு நீதி கேட்டும், மாற்றுத்திறனாளி நலத்துறையை வைத்துக்கொண்டு வாய் திறக்காத முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களை கண்டித்தும் நேற்று (18.7.2026 சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில் சென்னை ராஜாஜி சாலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாற்றுத்திறனாளிகள் அணி மாநில செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்எல்ஏ, கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் முழக்கங்கள் எழுப்பி கண்டன உரையாற்றினர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் எஸ். ராஜசேகர், கழகம் மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் கருணாகரன், எழிலன், வசந்தம் ஜெயராமன், வேங்கை வெங்கடேஷ், அம்பாள் குமார், ராஜ்குமார், ராதிகா மற்றும் 300-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் வாகனத்துடன் பங்கேற்று ஆர்ப்பரித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் பி.கே.சேகர் பாபு ஆற்றிய உரை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாற்றுத்திறனாளிகள் அணி சார்பில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி, வஞ்சிக்கப்பட்டு, கொடுமையான முறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கும் அன்புச் சகோதரர் மாற்றுத்திறனாளி சபரிவர்மனுக்கு நீதி கேட்டு நடைபெறும் இந்த மாபெரும் அறப்போராட்டத்திற்கு அனுமதி அளித்திருக்கும், கழகத்தின் இதயமாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**த.வெ.க. ஆட்சியில்**
**தரணியெங்கும் போராட்டம்!**

தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று 69 நாட்களை நெருங்கி இருக்கிறது. இந்த 69 நாட்களில், தங்கள் உரிமைக்காகப் போராடும் விவசாயிகள் ஒருபுறம், மின்வெட்டால் இரவு பகல் பாராமல் வீதிக்கு வந்து போராடும் பொதுமக்கள் ஒருபுறம், பாலுக்கு போதிய விலை நிர்ணயம் செய்யவில்லை என்று பால் உற்பத்தியாளர்களின் போராட்டம் ஒருபுறம், சத்துணவு ஊழியர்களுக்கு அளித்த உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டும் என்ற போராட்டம் ஒருபுறம், தூய்மைப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வோம் என்று கூறிய கூற்றை மெய்ப்பிக்க வேண்டும் என்ற போராட்டம் ஒருபுறம், டாஸ்மாக் பணியாளர்களின் போராட்டம் ஒருபுறம் என்று இவ்வாறு தமிழ்நாட்டை இருள் சூழ்ந்திருக்கும் போராட்டங்கள் இருந்தாலும், இன்றைக்கு மனிதநேயத்தோடு பார்க்கப்படும், மற்றவர்களின் உதவியோடு தங்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கையையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கும் மாற்றுத்திறனாளிகள் கூட இந்தத் கேடுகெட்ட ஆட்சியில் வீதிக்கு வந்து போராடும் ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கும் இந்த அரசைச் கண்டிப்பது முழுக்க முழுக்க ஒரு நியாயமான செயல்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கூட, அஜித்குமார் என்பவர் காவல் துறையினரால் அடித்து மரணம் அடைந்தார். அந்தச் சம்பவத்தைக் கொலை வழக்காக மாற்றி, அதில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ததோடு இல்லாமல், அவரின் குடும்பத்தினரைத் கைபேசியில் நேரடியாகத் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர், அன்றைய முதலமைச்சர் மனிதநேயமிக்க திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

**மாற்றுத்திறனாளிகள் நலனைக்**
**காத்தவர் தலைவர்!**

ஆம், அவர்தான் மாற்றுத்திறனாளிகளுக்குத் தரப்படும் மாதாந்திர நிதியை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திக் காட்டியவர். 14,000 பேர்களை ஒரே கையெழுத்தில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளாக நியமித்து, மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர். இதோ எதிரே இருக்கும் வாகனம், சிறப்புமிக்க வாகனம். இது இரண்டு, மூன்று பயன்பாடுகளுக்கு உண்டான வாகனம். இந்த வாகனத்தைக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்களுக்கு வழங்கியவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்!

**லாக் - அப் மரணங்கள் குறித்து**
**பேசாமல் முதல்வரின் வாய் லாக்!**

ஏன், மாற்றுத்திறனாளிகள் அண்ணா சாலையிலே போராடிக் கொண்டிருந்தபோது, நேரடியாக அவர்களின் போராட்டக் களத்திற்கே வந்து, அவர்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து, அந்தச் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்தவர், மனிதநேய மிக்க, நினைவில் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் என்றால், அது மிகையாகாது.

இன்றைக்கு இந்த மரண ஓலங்கள் எங்கும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைய முதலமைச்சர் கூட, ‘மாஸ்டர்’ என்ற படத்தில் சிறைக்குச் சென்று அனைவரையும் சீர்திருத்தம் செய்வதாக நடித்திருப்பார். சிறைக்குச் சென்று சீர்திருத்தம் செய்த அந்த முதலமைச்சர், இன்றைக்கு லாக்அப் மரணத்திற்கு, அவருடைய வாயை ‘லாக்’ செய்திருப்பதுதான் கொடுமையினும் கொடுமை என்பதை இந்த நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

எங்கு பார்த்தாலும் கலவரங்கள், சிறைச்சாலைகளிலே மரணங்கள், காவல் நிலையங்களிலே மரணங்கள், பாலியல் வன்கொடுமைகள், ரோட்டிலே சுதந்திரமாகப் பெண்கள் நடந்து செல்ல முடியாத சூழ்நிலைகள் நிலவுகின்றன. இது ஒரு காட்டாட்சிக்கு ஒப்பான ஆட்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகை யாகாது.

**சென்னையைப் பார்க்காத**
**அன்புமணிக்கு சுற்றிக் காட்டுகிறோம்!**

இந்த ஆட்சிக்கு முட்டுக்கொடுக்கப் பல்வேறு வகையில், பல்வேறு பிரிவினர் தோன்றி இருந்தாலும், நேற்றைக்குகூட பாட்டாளி மக்கள் கட்சியின் 38 வது ஆண்டு தொடக்க விழாவிலே அன்புமணி ராமதாஸ் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்துச் சென்றிருக்கிறார். அதில், “சென்னை சீரழிந்தது எங்களால்தான்” என்று அவர் வீட்டிலே உட்கார்ந்துகொண்டே கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார். ‘காமாலைக் கண்ணுடையவனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்’ என்பது போன்று, குற்ற உணர்வோடு பார்க்கும் அவருக்குக் குற்றங்கள் தான் தெரியும். எங்களோடு வாருங்கள், சுற்றிக் காட்டுகிறோம்!

வடசென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வில்லிவாக்கம் தொங்கு பாலம், வடசென்னை மேம்பாலம், கொருக்குப் பேட்டையிலே ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாலம், தற்போது கல்யாணபுரம் பகுதியில் கட்டப்பட்டு வரும் பாலம், பூத்துக் குலுங்கும் பூங்காக்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், மாலை நேரத்தில் நடைபயிற்சிக்காகவும் நிலத்தடி நீர் ஏறுவதற்காகவும் வெட்டப்பட்ட குளங்கள், சிறப்புமிகு மருத்துவமனைகள், கலைஞர் நூற்றாண்டு விழா மருத்துவமனை, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், வெகுவிரைவில் திறக்கப்பட இருக்கும் கூத்தம்பாக்கம் பேருந்து நிலையம், போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது முதல்முதலில் திறக்கப்பட்ட வண்ணாரப் பேட்டை போக்குவரத்துப் பணிமனை, மருத்துவமனைகள், இப்படி எண்ணற்ற திட்டங்களை வடசென்னை வளர்ச்சித் திட்டத்திலே கொண்டு வந்தவர், எங்கள் முதல்வர்.

**50 ஆண்டுகால பணியை**
**5 ஆண்டில் முடித்த எங்கள் முதல்வர்!**

த.வெ.க.வின் கதவுகள் திறப்பதற்கு முட்டி மோதிக்கொண்டிருக்கும் அன்புமணி ராமதாஸ் போன்றோர், எங்கள் மீது குறை சொல்ல எந்தத் தகுதியும் இல்லை. 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை, ஐந்தே ஆண்டுகளில் செய்து முடித்தவர் எங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புமணி ராமதாஸ் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், அவருடைய தரத்தை அவருடைய தந்தையே ஏற்கனவே பதிவிட்டிருக்கிறார்; அதைத் திரும்பிப் பார்த்துக் கொண்டாலே அவருடைய நிலை தெரியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இறந்துபோன சபரிவர்மன் மீது 200 கிராம் குட்கா இருந்ததாக வழக்கு. ஆனால், அண்மையில் ‘தூய சக்தி’ ஆகியிருக்கும், வாஷிங் மெஷினால் தூய்மைப்படுத்தப்பட்டி ருக்கும் குட்கா வழக்கிலே குற்றவாளி யாக இருக்கும் குட்கா புகழ் விஜயபாஸ்கரைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு, ஒரு மாற்றுத்திறனாளி குட்கா வைத்திருந்தார் என்ற பொய் வழக்கிலே அடித்தே சாகடித்திருக்கும் இந்த ஆட்சியை, வெகுவிரைவில் மக்கள் சாகடிப்பார்கள், சாகடிப்பார்கள், சாகடிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மீண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி மலர அயராது உழைப்போம்!

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசினார்.




கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. வெற்றி பெற்றதற்கான நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் கோவில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் – முன்னாள் அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் . ஒன்றிய செயலாளர்கள் ஆ.சின்னப்பாண்டியன், அ.சுப்பிரமணியன், பி.முருகேசன், பி.ராதாகிருஷ்ணன், கே.கருப்பசாமி, கு.ஜெயக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் சுரேஷ் வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.ராமர், பீட்டர், சிவசுப்பிரமணியன் , ஏஞ்சலா, ஒன்றிய செயலாளர்கள் நவநீத கண்ணன், மும்மூர்த்தி, செல்வராஜ் அன்புராஜன், ராமசுப்பு, ஆர்.ராதாகிருஷ்ணன், சின்னமாரிமுத்து, காசி விஸ்வநாதன், இம்மானுவேல் , சுரேஷ் கண்ணன், கிருஷ்ணகுமார், பாலகுமார், பாரதி கணேசன், வேலுச்சாமி, கு.தவமணி, இரா.மணி, சந்தானம், மோகன், க.சந்திரசேகர், நா.விஸ்வநாதராஜா மற்றும் எஸ்.வி.எஸ்.பி.மாணிக்கராஜா, எஸ்.வி.எஸ்.பி.நாகராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.